Montreal Irusu

இருசு

இலவசம் FREE Issue

பக்கங்கள்: 16 Friday / August 09, 2019 16 Pages

RE/MAX
Remax 3000 Inc.
வீடு வாங்கவோ! விற்கவோ!! விரும்புகிறீர்களா?
நட்பான, நம்பகரமான சேவைக்கு
Chartered Real Estate Broker
Kanthan Vilvaratnam
காந்தன் 514.824.9494

copy@net
COLOUR PRINT
DIGITAL / OFFSET
• Photocopy • Book Binding
• Lamination • Scanning
• Fax Services • Stamps
OPEN:
Mon to Sat - 11:00 am - 6:00 pm
Sunday : Closed
514.244.5809
125 JEAN TALON WEST,
Montréal, QC, H2R 1W9 De Castelnau
irusunews@gmail.com

இலங்கையின் வடக்கு - கிழக்கில் கடும் வறட்சியால் பாதிக்கப்படும் மக்கள்

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக 11,536 குடும்பங்களை சேர்ந்த 69,957 பேர் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. குறிப்பாக தம்பிலுவில், திருக்கோவில், மகாஓயா, பொத்துவில், பதியத்தலாவ, நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களில் குடிநீர் தட்டுப்பாடு பாரியளவில் நிலவுகின்றது. இங்கு 22 பவுசர்களில் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாக, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டார நாயக்க தெரிவித்தார்.

பிரதான குளங்கள், கிணறுகள் மற்றும் நீர்நிலைகள் துரிதமாக வற்றி வருகின்றன.மாவட்டத்திற்கு விவசாய நீர்ப்பாசனம் தொடக்கம் குடிநீர் வரை வழங்கி வருகின்ற அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டமும் வரலாற்றில் முதல் தடவையாக வெகுவாகக் குறைந்துள்ளது. 7 இலட்சத்து 70



ஆயிரம் ஏக்கர் அடி நீரைக்கொள்ளும் இச்சமுத்திரம், தற்போது 36 ஆயிரம் ஏக்கர் அடி நீரை மாத்திரமே கொண்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்தது.

மேலும், வரட்சியால் விவசாயம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இம்முறை வேளாண்மை செய்கை பண்ணப்பட்ட 47,300 ஹெக்டேயரில் 1,661 ஹெக்டேயர் நீரின்றி கைவிடப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் எவ்.எ.சமீர் தெரிவித்தார்.

இதேவேளை அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட சேனக்காடு, மொட்டயான்வெளி ஆகிய வயற்காணிகளின் 3,000 ஏக்கர் காணியில் பயிர்செய்து யானைகளை விரட்டிக் காவல் இருந்த விவசாயிகளின் நிலை இறுதித் தறுவாயில் கவலைக்கிடமாக மாறியுள்ளது. வெறும் 500 ஏக்கர் மட்டுமே அறுவடை செய்யப்பட்டுள்ளது.

மீதி ஊரக்கை, மொட்டையகல, பட்டிமேடு நீத்தையாறு வடகண்டம் ஆகிய பிரிவுகளிலுள்ள சுமார் 2,500 ஏக்கர் நிலம் வரட்சியால் முற்றாக கைவிடப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். அங்குள்ள பிரதான சாகாமக்குளம் வரண்டு காணப்படுகிறது. இதனால் விவசாயத்தை கைவிடவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

வரட்சியால் வடக்கு, கிழக்கு மாகாணங்களே அதிகமாக பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 21,094 குடும்பங்களை சேர்ந்த 70,636 பேர் வரட்சிக்கு முகங்கொடுத்துள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 18,074 குடும்பங்களைச் சேர்ந்த் 63,115 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 12,767 குடும்பங்களைச் சேர்ந்த 40,095 பேரும், வவுனியா மாவட்டத்தில் 138 குடும்பங்களைச் சேர்ந்த 465 பேரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

தொ.பக்கம்: 06

"ஆட்சிமாற்றம் மூலம் தமிழர்கள் எதிர்பார்த்த விடயங்கள் கிட்டவில்லை"

ஆட்சி மாற்றத்தின் மூலம் தமிழ் மக்கள் எதிர்பார்த்த பல கிட்டவில்லை. கிடைத்தவைகளும் முழுமை பெறவில்லை என்பதே உண்மையான விடயம் என தமிழ்த் தேசியக் கூட்டடைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் திருகோணமலையில் நடைபெற்றது.

அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்,

ஆட்சி மாற்றத்தின் மூலம் தமிழ் மக்கள் எதிர்பார்த்த பல கிட்டவில்லை. கிடைத்தவைகளும் முழுமை பெறவில்லை என்பதே உண்மையான விடயம்.

தொ.பக்கம்: 05



பக்கம்: 07

L'EXPERT IMMOBILIER
4280 Rue Beaubine Est, Montreal, QC, H1T 1S6. Tel.: 514.274.7575
உங்கள் அகத்திலுள்ள அகத்தைப்பெற..!
Vijay Mahalingam
Courtier Immobilier அழையுங்கள்:
Vijai: 514.699.4585

Sun Life Financial
stanly.kanags@sunlife.com
அனைத்து காப்புறுதி தேவைகளுக்கும் அழையுங்கள்...
1001 Dorchester Square, Suite 600, Montreal, Quebec, H3B 1N1.
1987ஆம் ஆண்டிலிருந்து..!
S. P. Kanags B.A.(Hons.)
Financial Security Advisir
கனக்ஸ் 514.824.1000

Kanes Textiles
கல்யாண கூறை புடவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
514.342.7070
Côte St-Catherine
புதிய முகவரி...
5700 Victoria Av, Montreal, QC, H3W 3H2

வீடு வாங்க ! விற்க !!
L'EXPERT IMMOBILIER
இல்லற வாழ்விலில் இனியதோர் இல்லத்தினை இன்பமுடன் அமைத்து..! இனிமையுடன் வாழ்ந்திட இன்றே அழையுங்கள்
devan29@hotmail.com
Vasavathevan (VAAS) Navaratnam
Real Estate Broker
Vaas 514.519.8227

www.lakshanaschettinad.com
Lakshana's CHETTINAD
Cuisine Indienne
* Party Hall - 25 பேர் முதல் 100 பேர் வரை..!
Birthday Party / ஒன்றுகூடல் நிகழ்வுகளை சிறப்பாக நடத்தி முடித்திட நாடுங்கள்..!
5623, Chemin de la Côte des Neiges, Montreal, H4T 1YS
Côte des Neiges Tel.: 514.738.3959

COURTIER IMMOBILIER AGREE
SAM'S
Groupe Sam's Inc.
உங்கள் விருப்பத்திற்கேற்ப சிறந்த வீடு, வியாபாரஸ்தாபனம் வாங்க ! விற்க !!
Kokulathas Chandrasegeram
Real Estate Broker
கோகுலன் 514.947.6457

L'EXPERT IMMOBILIER
4280 Rue Beaubien Est, Montreal, QC, H1T 1S6. Tel.: 514.274.7575
thankahomes@gmail.com
நிலையான சொத்தின் திறவுகோலைப் பெற்றிட...
Thanka Elaiyathamby AEO
Certified Real Estate Broker
தங்கா 514.823.2426

VSBD FINANCIAL INC.
அனைத்து காப்புறுதிகளையும் செய்துகொள்ள...
மேலதிக விபரங்களுக்கு பக்கம் 14
Vimal Arulanandam MDRT
Financial Security Advisir
E-mail: vsbd2003@gmail.com
விமல் 514.886.2732

Bijouterie ASIANA Jewellery
காலத்திற்கேற்ப புது வித வடிவங்களில் மங்கயர் மயங்கும் சிங்கப்பூர் நகைத்தெரிவுகளுக்கு ஏசியனா !
514.273.8300
PARC
524 Jean Talon West, Suite 5, Montreal, QC, H3N 1R5

நியாயமான விலையில்... நம்பிக்கையான காப்புறுதி நிறுவனம்
Allstate. You're in good hands.
9835 boul. L'Acadie, Montreal, QC, H4N 2W2
Tel.: 514.384.5271 ext 5013
Logini Niranjan
lniranjan@allstate.ca
Combine + SAVE on average of $464
Cell: 438.878.5575

Ramier Realty
Ramier Realty Inc.
Real Estate Agency
உங்கள் இல்லக் கனவுகளை நிஜமாக்கித்தரும் இனிய முகவர்
Thayalan Thiyagarajah
Real Estate Broker
தயா 514.808.6571


Bijouterie Lanka
Wedding Jewellery Set
Wholesale Sale & Rental
குறைந்த வட்டியில்
தங்க நகை அடகு சேவை
திருமண தங்கமுலாம் நகைகளை
கொள்வனவிற்கும், வாடகைக்கும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
Tel.: 514.543.3296
7233 St-Hubert, Montreal, QC, H2R 2N2 Jean Talon


Mode Durgaa
சிறுமியருக்கான
1 வயது முதல்
Party frocks,
Punjabi வகைகள்...
• Imitation Jewelleries
• Sarees • Salwars • Kurtas
• Lenghas • Gajiwala Half Sarees
• Pattu Pavada and Pattu Half Sarees
• Men's Shirts and Many More...
Tel.: 514.685.0329 Cell: 514.887.2202
Facebook: Mode Durgaa - E-mail: modedurgaa@yahoo.ca
4787, boul. Des Sources, Pierrefonds, Qc, H8Y 3C6.


MONEY PROBLEMS ?
உங்களுக்கு பணப்பிரச்சினையா ?
Make One Small Monthly Payment For All Your Debts !
உங்களுடைய சகல வங்கிக் கடன்களையும் தீர்க்க
மிகவும் இலகுவான வழி...!
மாதாந்தம் ஒரு சிறிய தொகையை செலுத்துவதுதான்...
No need for Bankruptcy
We Can...
• STOP Collection Calls
• Reduce your Debts
• STOP Wage Garnishment
• STOP Interest Right Away
• Re-Establish Your Credit
• Deal with your Tax Issues
Desjardins TD BANQUE LAURENTIENNE RBC Royal Bank
BANQUE NATIONALE CIBC Scotiabank BMO Bank of Montreal
GLOBAL FINANCE CANADA
Direct: 514.316.7354
LICENCE: 16862
Call for a FREE & CONFIDENTIAL meeting


லக்கி பான்ஷி
Lucky Fancy & Telecom
Special
GRINDER
Preethi - ECO Plus
எம்மிடம்
மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
மல்லிகைப்பூ மாலை
மல்லிகைப்பூ மாலை, மல்லிகைப்பூ என்பன
எம்மிடம் ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம்
அலங்காரப் பொருட்கள், அன்பளிப்பு பொருட்கள்,
தொலைபேசி அட்டைகள்...
• Photocopy & Fax Services Tel.: 514.736.2525
5895 A, Victoria Ave, Montreal, QC, H3W 2R6.


உங்கள் அனைத்து திருப்திகரமான
பிரயாணத் தேவைகளுக்கும்..!
VOYAGE SKYEXPRESS
YOUR SATISFACTION IS GUARANTEED
குறைந்த செலவில்
விமான சீட்டுக்களை
பெற்றுக்கொள்ளுங்கள்...
IATA AIR CANADA QATAR SriLankan
We offer competittive rates to...
SriLanka, India, Pakistan, Singapore, Europe, Australia and
to most countries world wide destinations.
எமது இதர சேவைகள்...
• பிரயாண காப்புறுதி (Travel Insurance)
• விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்தல்
• இலங்கை சென்றதும் வாகன ஒழுங்குகள்
• விமான நிலையம் முதல் வீடுவரை பாதுகாப்பாக அழைத்துச்செல்லல்
கவிதா சிவகுமார் (Kavitha)
514.561.8756
Tel.: 514.276.7600 - Fax: 514.272.8800
kavitha.skyexpress@gmail.com
671, Jean Talon Ouest, Montreal, QC, H3N 1S1. PARC


MUKESH
JOAILLIER DEPUIS 1975/JEWELLER SINCE 1975
முகேஸ் ஜுவல்லர்
• 18K Gold • 22K Gold • Platinum
• Silver • Colored Stone Jewellery
• Diamond Jewellery • Custom Designs
'தாலிக்கொடி'
தயாரிப்பதில்
முன்னோடிகள்..!
• Jewelry Repairs • Appraisals • Custom Designs (CAD/CAM)
• Pearl Restringing • Engravings • Jewelry Cleaning
620 Cathcart, Suite - 320, Montreal (Quebec), H3B 1M1.
Tel:. 514.861.3110 - Fax: 1.514.228.0104
www.mukeshjewellers.com
McGill


Restaurant
DAN
DINE-IN
TAKE OUT
DAN உணவகம்
அனைத்து தாயக அறுசுவை உணவுகள், சிற்றுண்டிவகைகளை
உடனுக்குடன் தயாரித்துத் தருகிறோம்.
CATERING
உங்கள் நிகழ்வுகளுக்குத் தேவையான உணவுகள், சிற்றுண்டிவகைகளை
குறித்த நேரத்தில் தயார்செய்து தருகின்றோம்.
Open: 10:00 AM to 10:30 PM Tél.: 514.277.9851
370 Beaumont, Montreal, QC, H3N 1T4 PARC

"அவசரப்படத் தேவையில்லை..."



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நாம் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் செல்ல வேண்டியதில்லை. முதலில் கட்சிகள் தமது வேட்பாளர்களை அறிவிக்கட்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் திருகோணமலையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக எமது நிலைப்பாடு என்ன என்று சிலர் கேட்கின்றனர். நாம் இப்போது அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. முதலில் போட்டியிடும் கட்சிகள் தமது வேட்பாளர்களை அறிவிக்க வேண்டும். யார், யார் போட்டியிடுகின்றனர் என்பதை ஆராய வேண்டும். அதன்பின்னர் அந்த வேட்பாளர்கள் தமது நிலைப்பாடு என்ன என்பதை அறிவிக்க வேண்டும். அதன்பின்னர் வேட்பாளர்கள் தொடர்பில் ஆராய்ந்து மக்கள் நலன் சார்ந்து முடிவெக்க முடியும் என்றார்.

"பௌத்தம் முதன்மையானது என்பதை ஒருபோதும் ஏற்கமாட்டோம்"

பௌத்தமதம் முதன்மையானது என்பதை நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம் எனத் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இந்தியா, இலங்கையில் உள்ள இந்து மக்களுக்கு ஏற்பட்டுள்ள அடக்கு முறையை தடுத்து நிறுத்தி மதங்களுக்கிடையிலான சமத்துவத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்

இந்து அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நல்லை ஆதின முன்றலில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

பௌத்த மத ஆதிக்கத்தினால் இது பௌத்த நாடு என்று கூறிக்கொண்டு எங்கள் மீது மிகப்பெரிய அடக்குமுறை மேற்கொள்ளப்படுகிறது.

பௌத்த மதம் முதன்மையானது என்றும் அதனை அனைவரும் எற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. இதனை நாங்கள் ஒரு போதும் ஏற்கமாட்டோம். இந்து ஆலயங்கள் போர்க் காலத்திலும் சரி அதற்கு பின்னரும் சரி அளிக்கப்பட்ட வரலாறுகள் இருக்கின்றன இதேபோலத்தான் தற்போது மத நல்லிணக்கத்திற்கு பாதகம் ஏற்பட்டு வருகிறது

இந்தியாவில் நூற்றுக்கணக்கான மதங்கள், இனங்கள், பிராந்தியங்கள் இருக்கின்றபோதும் அங்கு இந்து மதத்தினர் பெரும்பாலாக இருந்த போதிலும் கூட அந்த நாடு மதச்சார்பற்ற நாடாக அரசியலமைப்பு ரீதியாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த நாட்டில் பௌத்த மக்கள் பெரும்பான்மையாக உள்ளதனால் பௌத்த மதத்தை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அது தான் முதன்மை மதம் அரச மதம் எனக் கூறுவதை நாங்கள் ஏற்கமாட்டோம். மதங்கள் சமத்துவமாக இருக்கவேண்டும் மத நம்பிக்கையுள்ளவர்கள் பாதுகாக்கப்படவேண்டும் ஆலயங்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

மக்களின் விடுதலைக்காகவும் மதங்களின் சமத்துவத்திற்காகவும் தொடந்தும் நாங்கள் பாடுபடுவோம். இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

இந்தியத் தூதரை வெளியேற்றுகிறது பாகிஸ்தான் இரு தரப்பு வணிகத்தையும் துண்டிக்கிறது

இந்திய நிர்வாகத்தில் உள்ள காஷ்மீருக்கு இருந்த சிறப்புரிமைகளை பறிக்கவும், அந்த மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கவும் இந்தியா முடிவெடுத்த நிலையில் அதற்கு பாகிஸ்தான் கடுமையாக எதிர்வினையாற்றியுள்ளது.



இதையடுத்து அணு ஆயுத வல்லமை மிக்க இரு அண்டை நாடுகளின் உறவில் சிக்கல் தீவிரமடைந்துள்ளது.

இனி இந்தியாவுடன் இருதரப்பு வர்த்தகத்தை முற்றாகத் துண்டிப்பதும், தூதரக உறவைக் குறைப்பதும் அதில் சில.

இதனிடையே பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதரை அது வெளியேற்றுவதுடன், இந்தியத் தலைநகர் டெல்லியில் உள்ள தமது தூதரையும் அது திரும்ப அழைக்கிறது.

இந்தியாவில் கடந்த சில நாள்களாக நடந்த காஷ்மீர் தொடர்பான நிகழ்வுகளைத் தொடர்ந்து, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தலைமையில் அந்நாட்டின் தேசிய பாதுகாப்புக் குழு புதன்கிழமை கூடியது.

இந்தியா தன்னிச்சையாக, சட்ட விரோதமாக எடுத்த முடிவால் எழுந்துள்ள நிலைமை, இந்திய நிர்வாகத்திலுள்ள ஜம்மு காஷ்மீர் மற்றும் எல்லை கட்டுப்பாட்டு பகுதியின் நிலைமை பற்றி இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது என்று பாகிஸ்தான் தரப்பு கூறியுள்ளது.

அந்தக் கூட்டத்தில் இந்தியாவுக்கு எதிராக மிக முக்கியமான 5 முடிவுகள் எடுக்கப்பட்டன.

கறுப்பு ஜூலை படுகொலையை நினைவு கூர்ந்தார் பிரதமர்

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை படுகொலையின்போது உயிரிழந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்களையும் இடம்பெயர்ந்தவர்களையும் கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நினைவுகூர்ந்தார்.

ஈழத்தமிழர்களின் வாழ்வை புரட்டிப்போட்ட மிலேச்ச தனமான கறுப்பு ஜூலை இனப்படுகொலையின் 36ம் ஆண்டு நினைவேந்தல் தமிழ் மக்களால் நினைவு கூரப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கனடிய பிரதமர் வெளியிட்டுள்ள



அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "கறுப்பு ஜூலை என்பது நாட்டில் பல தசாப்தங்களாக அமைதியின்மை மற்றும் அதிகரித்து வரும் பதட்டங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறை கலவரங்கள் மற்றும் கொடூரமான அழிவுகளின் ஒரு வாரமாகும்.

இதுவே 30 ஆண்டுகளாக நீடித்த ஒரு மோதலுக்கு வழிவகுத்தது, மேலும் பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொன்றது மற்றும் இலங்கை முழுவதும் உள்ள சமூகங்களில் நீடித்த காயங்களை விட்டுச் சென்றது.

1983 இல் 1,800 க்கும் மேற்பட்ட தமிழர்களை வரவேற்க ஒரு சிறப்பு நடவடிக்கை திட்டத்தை கனடா அரசு செயல்படுத்தியது. தமிழ்-கனடியர்கள் ஒவ்வொரு நாளும் கனடாவுக்கு அளிக்கும் மகத்தான மிகப்பெரிய பங்களிப்புகளை காண்கிறோம்.

கறுப்பு ஜூலை கலவரத்தில் உயிரிழந்த குடும்பம், நண்பர்களை இழந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாட்டில் அர்த்தமுள்ள நீதி, பொறுப்புக்கூறல், அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி செயற்பாடுகளுக்கு கனடா தனது முழு ஆதரவையும் தொடர்ந்தும் வழங்கும்" என குறிப்பிட்டுள்ளார்.



Albas
CONSTRUCTION & RENOVATIONS





License Contractor
R.B.Q-5599-2333-01
• Shingles
• Ashphalt
• Tar
• Graval
• Mainbraine
• Ceramic Floor
• Wood Floor
• Brick • Block
• Stone

• Kitchen Renovation • Bathroom Renovation
• All Kind of Roofing
அனைத்து திருத்தல் வேலைகள், கற்கட்டுமான வேலைகளை சிறந்த முறையில் செய்து தரப்படும்
• சகல விதமான Insurense வேலைகள் செய்து தரப்படும்
Contact : Albert Tel.: 514.258.6173
albasconstruction.com • E-mail: info@albasconstruction.com

ALIMENTS EXOTIQUES



உடன் ஆட்டிறைச்சி பங்கு
சில்லறையாகவும், மொத்தமாகவும்
எம்மிடம் கிடைக்கும்.
கோழிஇறைச்சி, மாட்டிறச்சி மற்றும்...
இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்
உடன் மரக்கறி, பழவகைகள், மளிகைப் பொருட்கள்
யாவற்றையும் தரமாகவும் மலிவாகவும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
6685, Victoria Ave, Montreal, Qc, H3W 2T2 - Tel.: 514.733.7577 Plamondon

Nickes Fancy
• Sarees • Salwars • Kurtas • Denim Skirt, Nighty, Shirt with tie, Party Pants
மற்றும்...
சுவாமிப் பட்டுகள், வேட்டிகள், அன்பளிப்பு பொருட்கள்,
விளையாட்டு பொருட்கள், வாசனைத்திரவியங்கள்
அனைத்துவகை புத்தகங்கள்...





Tel.:
514.495.3765 or
514.270.8181
462 Jean Talon West, Montreal, Metro : Parc

காலநிலை

Montreal LONG - TERM FORECAST

வெள்ளி, Aug. 09
High 24 °C Low 16 °C
High Feels like 28 °C

24 மணிநேர இடைவெளியில் 2-4 மி.மீ மழை பொழியலாம். மாற்றங்கள் நிகழலாம்.

சனி Aug. 10	ஞாயிறு Aug. 11	திங்கள் Aug. 12
High 20 °C	High 24 °C	High 25 °C
Low 14 °C	Low 17 °C	Low 16 °C
High Feels like 21°C	High Feels like 24°C	High Feels like 29°C

செவ்வாய் Aug. 13	புதன் Aug. 14	வியாழன் Aug. 15
High 24 °C	High 23 °C	High 22 °C
Low 16 °C	Low 15 °C	Low 15 °C
High Feels like 27°C	High Feels like 25°C	High Feels like 23°C

The Weather Network

அலையோசை கலையகம்
alaiyosai.productions@gmail.com

எமது நன்றி...
செய்தி மூலங்கள், படங்கள்:
சர்வதேச இணையத் தளங்கள்.



தமிழ்த் தாய் ஆலயம்

சமய வேறுபாடுகள் களைந்து
சமூக வேறுபாடுகள் துறந்து,
வீதி, கிராமம், ஊர், நகரம், நாடு கடந்து
அரசியலை அகற்றிவிட்டு
மொழிக்காய் ஒன்றிணைவோம்!
விதை போட்டவர் ஒருவராகலாம்
விருச்சமாக்க பல கரங்கள் வேண்டும்!!
பாபையணிக்க நீங்கள் வேண்டும்!!!
எண்ணம் சரியாயின்...
வருக... இனிதாய் தொடர்வோம்.

www.facebook.com/thamilthaai.aalayam
thamilthaai@gmail.com

பலம் - பலவீனம்...

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்றிருந்தார் மகிந்த ராஜபக்சவின் புதல்வர் நாமல் ராஜபக்ச - கிளிநொச்சிக்கு சென்றிருந்தார் முன்னாள் மகிந்தவின் அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே.

அடுத்தடுத்து வடக்குக்கு வந்து தமிழ் மக்களைச் சந்தித்துவருகின்றனர் மகிந்த தரப்பினர். வருபவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முடிந்தவரை வசைபாடுகின்றனர். ஏன் ?

அன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சியில், மகிந்த தோற்கடிக்கப் பட்டதன் மூலம் மகிந்தவின் சிந்தனையில், நிகழ்ச்சி நிரலில் இருந்த தமிழ் இனத்திற்கு எதிரான அனைத்து நாசகார திட்டங்களும் (தற்காலிகமாக) இடைநிறுத்தப்பட்டிருந்தன. இருந்தும் முடிந்தவரை புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கு பெரும் தடையாகவும் இருந்தனர். வெற்றியும் கண்டனர்.

தற்போது தெற்கில் மகிந்த அணியினர் பௌத்த சிங்கள பேரினவாத பெரும்பான்மை மக்களின் ஆதரவை பெற்றிருந்தும் அதிகாரத்தை கைப்பெற்ற முடியவில்லை. இதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம்.

கடந்த மாதம் அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணையை எதிர்த்து வாக்களித்திருந்தனர். பிரேரணைக்கு ஆதரவாக 92 வாக்குகளும் எதிராக 119 வாக்குகளும் அளிக்கப்பட்டன. கூட்டமைப்பின் 14 வாக்குகளும் பிரேரணைக்கு ஆதரவாக அளிக்கப்பட்டிருக்குமானால் அது ஒரு மேலதிக வாக்கினால் நிறைவேறி இருக்கும் என்பதுடன் அரசு பதவி விலகவேண்டிய கட்டாய நிலையொன்றும் தோன்றியிருக்கும்.

மகிந்தவின் கை ஓங்கியிருப்பின் வேகமான அபிவிருத்தியும், தமிழருக்கான அபிவிருத்தி என்னும் போர்வையில் வேகமான பௌத்தமயமாக்கலும் வடக்கில் தொடர்ந்திருக்கும். ஆனால் தமிழர்களின் அரசியல் தீர்வு விடையம் மீளமுடிதாத மோசமான நிலைக்கு பாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கும்.

இந்த அரசைக் கவிழ்த்து விட்டு இருப்பதையும் இழக்கவேண்டி வரும் என்னும் நிலையானதொரு கேள்வியே தமிழ் தரப்பிற்கு எழுந்துள்ளது.

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து அரசியல் தீர்வு காண்பதற்கு சிங்கள அரசுகள் தவறிவிட்டனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசி யக் கட்சியும் மாறி மாறி ஆட்சி பீடத்தில் அமர்ந்த போதிலும் தமிழர்களுக்கு தீர்வு எதையும் வழங்கவில்லை என்னும் வாதமே இதுவரை காலமும் இருந்துவந்தது.

ஆனால் இன்று இவ் இரு பெரும்பான்மை இன கட்சிகளிடமிருந்து எஞ்சி இருப்பவையை தக்கவைக்கவும், காப்பாற்றவுமே தமிழ் தலைமை போராடிக் கொண்டிருக்கிறது. அதுவும்... மறுபுறம் தமிழரின் ஒற்றுமை சிதைந்து கொண்டிருக்கும் நிலையில்.

தற்போது அடுத்தடுத்து வடக்குக்கு வந்து தமிழ் மக்களைச் சந்திக்கிறார்கள் மகிந்த தரப்பினர். அவர்கள் தமிழ் மக்களிடையே பேசிவருவதை அவதானியுங்கள்...

"யாழ்ப்பாண மக்கள் அரசியல் தீர்வைக் கேட்கவில்லை. அவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும். எமது காலத்தில் வெள்ளை வான் என்றதெல்லாம் பொய். அது ஐக்கிய தேசியக் கட்சி கூறிய கதை. இப்போது போர் முடிந்துள்ளது. அமைதி இருக்கின்றது. கடந்ததை மறந்து இணைந்து வேலை செய்வோம். போர் நடந்த காலத்தில் ஆள்கள் காணாமல் போனார்கள். கொழும்பில் புலிகள் குண்டு போட்டபோது எமது ஆட்களும் காணாமல் போனார்கள். நாங்கள் என்ன செய்வது ? போர் நடந்த காலத்தில் நடந்தவற்றைப் பேசிப் பயனில்லை. எத்தனை காலம் அதைப் பற்றிப் பேசுவது ? பேசிப் பேசி என்ன கிடைத்திருக்கின்றது ? அதை விடுத்து நாம் இணைந்து வேலை செய்வோம். கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆதரவு கொடுத்தாகிவிட்டது, சரத் பொன்சேகாவுக்கும் ஆதரவு கொடுத்தாகிவிட்டது. தமிழ் மக்களுக்கு என்ன கிடைத்திருக்கின்றது என்று பார்க்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவளித்தது. அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்காகவே என கூறப்பட்டது. ஆனால் எதுவுமே நடக்கவில்லை" என்று தெரிவித்து வருகிறார்கள் மகிந்த அணியினர் வடக்கில்.

முடிந்த வரையில் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கிவரும் ஆதரவினை குறைப்பதற்கே முயற்சிக்கின்றனர். ஏன்?
மகிந்த சுலபமாக எழ முடியாதவாறு கூட்டமைப்பு காய் நகர்த்துவதே !

இதனை தமிழர்களின் ஒற்றுமையின் பலத்தினை சிதறடிக்க முனையும் தமிழர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

• இருசு •

MONTREAL IRUSU
இருசு

Mailing Address: Office
"Montreal **IRUSU**"
125 Jean Talon West,
Montreal, Quebec, H2R 1W9.
Tel.: 514 244 5809
Fax: 514.447.3347
e-mail: **irusunews@gmail.com**

Editor / ஆசிரியர்
Irusu Management / இருசு நிர்வாகம்

Managing Director / நிர்வாக இயக்குனர்
Sutha Pathmanathan / சுதா பத்மநாதன்

Thamil Mukavari Publication

விளம்பரங்கள்
அறிவித்தல்கள்

To Advertise
11:00 am to 7:30 pm

Deadline for Advertising
Monday @ 6:00 p.m
for Classified,
every Tuesday @ 6:00 p.m

விளம்பரங்கள் : **திங்கள்** மாலை
7:30 மணி வரையும்,
அறிவித்தல்கள் : செவ்வாய் மாலை
6:00 மணி வரையும்,
ஏற்றுக்கொள்ளப்படும்

விளம்பரத் தொடர்புகளுக்கு:
Contact for Advertisements

Tel.: 514 244 5809

E-mail: **irusunews@gmail.com**

Advertising & Payment Locations

Montreal - **Parc EX**

125 Jean Talon West,
Montreal, Quebec, H2R 1W9.
Tel.: 514.447 3344

'மொன்றியல் இருசு' தமிழ் பத்திரிகை கனடா, கியூபெக் மாநிலத்தில், மொனம்றியல் மாநகரில் பிரசுரிக்கப்படுகின்றது. இப்பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துகள் அவற்றை எழுதியவருடைய அபிப்பிராயமே தவிர பத்திரிகையின் எண்ணத்தைப் பிரதிபலிப்பவை அல்ல. இவ் இதழில் வெளியாகும் விளம்பரங்கள் அனைத்துக்கும் சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். 'மொன்றியல் இருசு' பொறுப் பேற்கமாட்டாது. எல்லா உரிமைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது. 'மொன்றியல் இருசு' அனுமதியுடனேயே இவ்விதழில் வெளியாகும் விடயங்களை மறு பிரசுரம் செய்யமுடியும்.

The Tamil weekly 'Montreal IRUSU' is published in Montreal, Quebec, Canada.The views expressed by individual writers are those of their own and do not necessarily reflect the opinion of 'Montreal IRUSU'. Advertisers are responsible for their respective advertisements. 'Montreal IRUSU' will not bear any responsibility. All rights reserved. The contents of this publication may be reproduced in whole or in parts only with the consent of 'Montreal IRUSU'.

Ananthan Video Production
VIDEO & PHOTOGRAPHY Professional Video Québec Inc.



Specializing in Weddings, Birthday and other special occasions.
படப்பிடிப்பு கலையில் பலவருட அனுபவம்..
நேர்த்தியான சேவை..
High Quality Video Filming with DVC Pro 3CCD Digital Camera



Video Transfer : PAL ⇨⇦ NTST ⇨⇦ SECAM / D.V.D ⇨⇦ VIDEO ⇨⇦ V.C.D
Tel.: 514.276.4391 Cell: 514.826.0781



திருப்தியான இல்லம் !
ஆனந்தமான வாழ்க்கையின் அடிப்படை !!
"Don't gamble on your next real estate transaction"
• I have the key to your future. • Do Business even the economy in the slump! Yesterday is history tomorrow is mystery but today is a gift that's why they call it "Present" !! So Use the opportunity today!!!
நிலையான சொத்துக்களை வாங்கிட...
அழைக்க வேண்டிய உங்கள் வீடு விற்பனை முகவர்

Sugumaran Sinniah **(Sugu)**
Real Estate Broker
e-mail: seranvib@hotmail.com

சுகுமாரன் (சுகு)
514.299.3186

ஆட்சிமாற்றம் மூலம்...

ஆனால், ஏதும் இடம்பெறவில்லை என்று கூறமுடியாது. காணி விடுவிப்பு, இராணுவப் பிரசன்னம், கைதிகள் விடுதலை என்பவற்றில் முழுமையாக இல்லாதுவிட்டாலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.


அரசமைப்பு விடயத்திலும் ஒரு யாப்பு வரையப்பட்டு இறுதிக் கட்டத்தைத் தொட்டு நிற்கின்றது. முழுமை பெறாதபோதும் அதை முடிவுறுத்தும் தறுவாய்க்கு வந்துள்ளோம். அதேபோன்று இடம்பெறாத விடயங்களும் உண்டு என்றார்.

அணு ஆயுதம் தயாரிக்க இணையத்தில் பணம் திருட்டு!

தனது அணுஆயுத திட்டங்களுக்கு தேவையான நிதியை பெறுவதற்காக, இணைய திருட்டில் ஈடுபட்டு இரண்டு பில்லியன் டாலர்களை வடகொரியா பெற்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வங்கிகள் மற்றும் கிரிப்டோகரன்சிகள் எனும் மின்னணு பணத்தை மையமாக வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களின் மூலம் இரண்டு பில்லியன் டாலர்களை வடகொரியா திருடியுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான 35 இணைய தாக்குதல் சம்பவங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை விசாரித்து வருவதை பிபிசிக்கு கிடைத்த தகவல்கள் உறுதிப்



படுத்தியுள்ளன. கடந்த இரண்டு வாரங்களில் தனது நான்காவது ஏவுகணை சோதனையை (செவ்வாய்க்கிழமை) வடகொரியா மேற்கொண்டது. அப்போது இரண்டு ஏவுகணைகள் விண்ணில் ஏவப்பட்டன.

தொ.பக்கம்: 06

இந்துக்கள் தமது பூர்வீக நிலத்தை அனுபவிக்க வழி அமைக்கப்பட்டுள்ளது

கன்னியா வெந்நீருற்று பகுதியை மீள பூர்விக மக்களிடம் கையளிக்குமாறு திருகோணமலை நீதி மன்ற கட்டித் தொகுதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண மேல் நீதி மன்றத்திலே மிக முக்கியமான நான்கு விடயங்களுக்கு நீதி மன்றம் தடையுத்தரவை வழங்கி இந்துக்கள் தமது பூர்வீக நிலத்தை அவர்கள் அனுபவிக்க வழி அமைக்கப்பட்டுள்ளது. என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.



மாகாண மேல் நீதி மன்றத்தில் தடையுத்தரவை பெற்றதன் பின் நீதி மன்ற முன்றலில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.



நீண்டகாலமாக நிலவி வந்த கன்னியா வெந்நிருற்று ஆதனத்தின் பிரச்சினைக்கு தீர்வு கிட்டப்பட்டுள்ளது. இந்த ஆதனங்கள் திருகோணமலை மாரியம்மன் ஆலயத்திற்கு சொந்தமான ஆதனங்கள் அதனுடைய நம்பிக்கைப் பொறுப்பளராக உள்ள கோகிலவாணி ரமனி அம்மா உள்ளார். எனவே அவர்தான் வழக்கைகின் மனுதாரராக நீதி மன்றத் திற்கு கொண்டு வந்து வெந்நிருற்று பகுதி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்து மக்கள் செய்து வந்த கிரிகைகளை தற்போது தொல்பொருள் திணைக்களம் தடுக்கின்றது என்ற முறைப்பாட்டை வைத்திருக்கின்றார்.

இது சம்மந்தமான எழுத்தாணை வழங்குகின்ற அதிகாரம் மாகாண மேல் நீதி மன்றத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. காணி தொடர்பான அதிகாரங்கள் கிழக்கு மாகாண சபைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற படியால் காணி தொடர்பாக எவரையும் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் கொண்ட எழுத்தானைகளை நீதி மன்றம் வழங்க முடியும். எனவே கிழக்கு மாகாண நீதி மன்றம் ஜூலை 22ம் திகதி திருகோணமலை அமர்விலே எமது எழுத்தனை மனுவை பரிசீலித்து நீதி மன்ற நியாயத்திட்டத்திற்கு உட்பட்ட விடயம் கருதி இந்த வழக்கு தொடர்பாக எதிர் மனுதாரருக்கு நாங்கள் கொடுத்த அறிவித்தல்கள் அவர்களுக்கு முறையே சேர்ப்பிக்கப்பட்டது. என்பதை உறுதி செய்து நாங்கள் கேட்டுக் கொண்ட இடைக்கால தடை உத்தரவு ஐந்தில் நான்கை நீதி மன்றம் வழங்கியுள்ளது.

இதில் ஒரு இடைக்கால தடையுத்தரவு பிள்ளையார் ஆலயத்தை மீள கட்டுவதை எவரும் தடுக்கக் கூடாது என்று கேட்டிருந்தோம் அதனை நீதி மன்றம் வழங்க வில்லை. அது சம்மந்தமாக தொல் பொருள் திணைக்களம் வரத்தமானி அறிவித்தல் ஒன்றினை விடுத்துள்ளது. எனவே வழக்கின் இடையில் அல்லது வழக்கின் இறுதியில் இது தொடர்பாக இரு தரப்பினையும் விசாரித்து தீர்ப்பு வழங்குவதாக மன்று கூறியுள்ளது. எனினும் மிக அவசரமான மற்றைய நான்கு விடயங்களுக்கும் நீதி மன்றத்தால் தடையுத்தரவு வழங்கப்பட்டள்ளது.

இவற்றில் முதலாவதாக பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் விகாரை அமைப்பதை உடனடியாக நிறுத்துமாறு நீதி மன்ற தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த பிரதேசத்திற்கு பக்தர்கள் செல்வதைத் தடுக்கக் கூடாது, அடுத்தாக ஆலயத்திற்கும் இப்பிரதேசத்திற்கும் செல்பவர்களிடம் டிக்கட் விற்று பணம் பெறக் கூடாது என்றும் சுதந்திரமாக இந்து மக்கள் சென்று வர வேண்டும் என்றும் அதனை அவரும் தடுக்கக் கூடாது என்றும் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


அடுத்தாக இந்த ஆதனங்களுக்கு நம்பிக்கைப் பொறுப்பாளராக உள்ள கோகிலவாணி ரமனி அம்மா அவர்களும் அவர்களின் முகவர்களும் இந்த பிரதேசத்தை நிர்வகிப்பதில் எவரும் தடுக்கக் கூடாது என்றும் நான்காவதாக மிகுதிப் பிரதேசத்தை அதாவது பிள்ளையார் ஆலயம், வெந்நீருற்று உள்ள இடத்தை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களை புனரமைப்பு செய்வதையும் எவரும் தடுக்கக் கூடாது என்றும் நான்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதி மன்ற கட்டளைகளையும் நீதி மன்ற பதிவாளர் ஊடாக அனுப்புகின்ற அறிவித்தலையும் எதிர்மனுதாரர் இருவருக்கும் அனுப்பி அவர்கள் இருவரையும் எதிர்வரும் ஓகஸ்ட் 29ம் திகதி சமூகமளிக்குமாறு அழைப்பானையும் அனுப்பப்பட்டுள்ளது. 'மேலும் அவசரமாக இன்னுமொரு கோரிக்கையையும் முன் வைத்தோம். அதாவது இந்த வெந்நீருற்றுக்களிலே தான் இறந்த தங்களுடைய மூதாதைகளுக்கான பிதுர் கடன்களை இந்து சமயத்தவர் செய்வது வழக்கம் அதிலேயும் விசேடமாக ஆடி ஆமாவாசையன்று இதனை அணைவரும் மேற்கொள்வது வழக்கம். இந்து பக்தர்கள் அங்கு செல்வதை தடுப்பார்கள்..., அப்படி தடுக்கக் கூடாது என்ற தடையுத்தரவு தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே எந்த தடையும் இல்லாது இந்துக்கள் ஆடி அமாவாசை தினத்தில் தங்களது கிரிகைகளை மேற்கொள்ளமுடியும் என்றார்.

முழு இந்து மக்களுக்குமாக கோகிலவாணி ரமனி அம்மையார் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். அவருக்கும் அனைத்து மக்கள் சார்பிலும் நன்றி சொல்ல நாம் கடமைப்பட்டுள்ளோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

A.M.R
FRUTERIE
உடன் மரக்கறி வகைகள், பழவகைகள், மளிகைப் பொருட்கள்,
Frozen உணவுப் பொருட்கள் அனைத்தும்
தரமானவையாகவும் நியாய விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
A.M.R MONTREAL
1150, Boul. Décarie
Montreal, Quebec, H4L 3M9.
514.334.6737
A.M.R ST-JÉRÔME
85, Rue St-Georges
St-Jérôme, Quebec, J7Z 4Z4.
450.438.1141

புதுவாழ்வின் ஐக்கிய ஆலயம்
New Life Fellowship Church
வட அமெரிக்காவின் முதல் தமிழ் கிறிஸ்தவ சபை
இயேசு இரட்சிக்கிறார் - இயேசு குணமளிக்கிறார்
Friday @ 7:00 PM Youth Fellowship
Saturday @ 10:00 AM உபவாசக் கூட்டம்
Sunday @ 3:45 PM ஞாயிறு ஆராதனை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
1012 St. Clare Rd, Town of Mount Royal, Montreal, QC, H3R 2N1, Canada
Tel.: 438.876.5695




கடன் உதவி
பெற்றுக் கொடுக்கப்படும்
வங்கியிலிருந்து குறைந்த வட்டி விகிதத்தில்
தகுந்த முறையில் கடன் பெற்றுத் தரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:
அம்பி: 438.933.5550

MARCHÉ THARSINI
இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள், பழவகைகள்
என்பன எம்மிடம் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
THARSINI VIDEO
5670, Victoria Avenue, Montréal, Quebec.
Metro : Côte Ste.Catherine. ☎: 514. 737.1261

இலங்கையின் வடக்கு...




வடமாகாணத்தில் மொத்தமாக 57,589 குடும்பங்களைச் சேர்ந்த 1,93,578 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.



வடக்கு மாகாணத்துக்கு அடுத்தப்படியாக கிழக்கு மாகாணமே வரட்சியால் அதிக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இங்கு நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் விவசாய நிலங்கள் வரண்டுபோயுள்ளன. வரட்சியால் அம்பாறை மாவட்டத்தில் 11,536 குடும்பங்களைச் சேர்ந்த 69,957 பேரும், திருக்கோணமலை மாவட்டத்தில் 2,877 குடும்பங்களைச் சேர்ந்த 9,380 பேரும் 23,518 குடும்பங்களைச் சேர்ந்த 77, 633 பேரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். கிழக்கில் மொத்தமாக 37,931 குடும்பங்களைச் சேர்ந்த 1,56, 990 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 7900 குடும்பங்கள் வறட்சியினால் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் 7947 குடும்பங்களை சேர்ந்த 27564பேர் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. அதனடிப்படையில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் வறட்சியினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குறித்த புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.



கரைச்சியில் - 3001 குடும்பங்களை சேர்ந்த 10454 பேர். கண்டாவளையில் - 757 குடும்பங்களை சேர்ந்த 3009 பேர். பூநகரியில் 3693 குடும்பங்களை சேர்ந்த 12629 பேர். பச்சிலைப்பள்ளியில் 496 குடும்பங்களை சேர்ந்த 1472 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்தவ நிலைய புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலை தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஊட கங்களிற்கு கருத்து தெரிவித்திருந்தார்.

மேற்குறிப்பிட்ட வகையில் தற்போது வறட்சியினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் அதனை உறுதிப்படுத்தியிருந்தார். இதேவேளை வறட்சியினால் நீர்நிலைகளின் நீரமட்டம் விரைவாக குறைவடைந்துள்ளதாகவும், மக்கள் குடிநீர் உள்ளிட்ட பிரச்சினைகளிற்கு முகம் கொடுத்த வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வறட்சி தொடரும் பட்சத்தில் மோசமான நிலை ஏற்படும் எனவும் அவர் இதன்போது தெரிவித்திருந்தார்.

இதேவேளை வறட்சியினால் பாதிக் கப்பட்ட மக்களிற்கான குடிநீரை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மெற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதற்கான நிதி கிடைக்கப்பெற்று அவ்வந்த பிரதேச செயலகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

குறித்த நிதியில் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியும் எனவும் அவர் இதன்போது ஊடகங்களிற்கு தெரிவித்திருந்தார்.

அணு ஆயுதம்...

தென்கொரியா மற்றும் அமெரிக்கா இடையிலான கூட்டு இராணுவ பயிற்சிக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலேயே இந்த சோதனையை நடத்தியுள்ளதாக வடகொரிய தலைவர் கிம் ஜாங்-உன் (புதன்கிழமை) வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருநாடுகளின் கூட்டு ராணுவ பயிற்சி, பிராந்தியத்தின் அமைதி உடன்படிக்கைகளுக்கு எதிரானது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீண்டும் ஏவுகணை சோதனை

அடையாளம் தெரியாத இரண்டு ஏவுகணைகளை ஏவி மீண்டும் சோதனை செய்துள்ளது வடகொரியா. இரு வாரங்களில் வட கொரியா நான்காவது முறையாக இவ்வாறு செய்துள்ளது என தென் கொரிய ராணுவம் தெரிவித்துள்ளது. தென் ஹ்வாங்ஹே மாகாணத்தில் இருந்து, கிழக்கில் உள்ள கடல் பகுதிக்கு இந்த ஏவுகணை ஏவப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையை கண்காணித்து வருவதாகவும், தென் கொரியா மற்றும் ஜப்பான் நாடுகளுடன் இது தொடர்பாக ஆலோசனை நடத்தி வருவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் தென் கொரியா மேற்கொண்ட கூட்டு ராணுவப் பயிற்சி குறித்த தனது கோபத்தை இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளது வட கொரியா.

இந்த வருடாந்திர கூட்டு ராணுவ பயிற்சிகள் ஆடம்பரமாக நடைபெறவில்லை. எனினும், இது அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் தென் கொரிய தலைவர் மூன் ஜே-இன் ஆகியோருடன் எட்டப்பட்ட ஒப்பந்தங்களை மீறுவதாக அமைந்துள்ளதாக வட கொரியா தெரிவித்துள்ளது. அணு ஆயுதங்களை தயாரிப்பதாகவும், ஏவுகணை சோதனைகள் செய்வதாகவும் கூறி அமெரிக்காவும் மற்றும் உலக நாடுகளும் வடகொரியா மீது பொருளாதாரத் தடைகள் விதித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஓம் சாந்தி

பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம் வழங்கும்

மகிழ்ச்சியான வாழ்க்கை பயணத்திற்கான எளிய இராஜயோக தியானம்

- மன அழுத்தத்திலிருந்து விடுபட
- டென்ஷனை நீக்க, மன வலிமையை அதிகரிக்க
- மன ஒருமைபாட்டை வளர்த்துக் கொள்ள
- கோபத்தை குறைக்க
- வாழ்வில் முன்னேற்றம் அடைய
- பயம், தாழ்வு மனப்பான்மை போன்ற எதிர்மறை உணர்வை நீக்கி வாழ்வில் முன்னேற
- தன்னம்பிக்கை பெற்றிட
- திறமைகளை வெளிக் கொண்டுவர
- நற்பண்புகளை வளர்த்து கொள்ள
- மனம் & உடல் ஆரோக்கியம் பெற
- மூட நம்பிக்கைகளை அகற்றி ஆக்கபூர்வமான உணர்வுகளை உருவாக்கிட
- தீய பழக்கங்கள் & தீய குணங்களிலிருந்து விடுபட
- சுமூகமான குடும்ப வாழ்க்கை வாழ்ந்திட இராஜயோக தியானம் பயிலுங்கள்

பயிற்சி இலவசம்

தனக்காக தினமும் 10 நிமிடங்கள் ஒதுக்கி தியானம் செய்து வாழ்வில் முன்னேற்றம் அடையுங்கள்

தியானப் பயிற்சி அளிக்கப்படும் இடம்
7501, St Denis Street
Montreal

தொடர்புக்கு : (438) 401 1315
(514) 806 8093

We are University graduates, offering tutoring for all Subjects and levels

G.T TUTORING

ALL LEVELS
- Elementary
- Highschool
- CEGEP
- University





Elementary
- French
- Mathematics
- English
- Science
- History

Highschool
- Mathematics
- Physics
- Chemistry
- Science
- French
- English
- History

College
- Math: Cal I-II-III, Linear Algebra and much more
- Physics : Mechanics, Electricity and Magnetism, Wave and optics and much more
- Chemistry : General chemistry, Chemistry of solution

அனுபவம் மிக்க University பட்டதாரிகளால் உங்கள் இடத்திற்கு வந்தும் கற்பிக்கப்படும்.

Private or Group Sessions !
Schedules are quite flexible ! Homework help !
Reasonable rates !
Tutors are well qualified professionals !

மேலதிக விபரங்களுக்கு / For More Info :
514.813.0430
Near Du College
www.gttutoring.com - E-mail: info@gttutoring.com

தேடல்களின் பதிவுகள்...



ஒன்றல்ல, இரண்டல்ல....., நூறல்ல, இருநூறல்ல.... ஆயிரமல்ல..... ஒரே இரவில் பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மின்னல்களின் தாக்கத்துக்கு இலக்கானது அல்பேட்டா!





அடுத்த இதழ் முதல்...

வெஸ்ட் ஐலண்ட் தமிழ் சமூகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி 2019



